**<u>சார்பு நீதிமன்றம், கொடுமுடி,</u>**
**<u>ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.338/2024</u>**

பழனியம்மாள் ... வாதி

/எதிர்

எஸ். தங்கராஜ் ... பிரதிவாதி

**<u>தாவா மதிப்பீட்டு விவரம்</u>**

| | | |
|---|---|---|
| 1 தாவா நீதிமன்றக் கட்டண பிரிவுகள் | : | பிரிவுகள் 37(2), 25(டி) மற்றும் 27(சி) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டப்படி |
| 2 தாவா விவரம் | : | பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை, இதர பரிகாரங்களுக்காக |
| 3 தாவா சொத்தின் மதிப்பு | : | ரூ.12,66,000/- |
| 4 தாவா மதிப்பு | | ரூ.4,33,000/- |
| 4 நீதிமன்றகட்டணம் | : | ரூ.5330/- |

(Sd)... (Sd)...
வாதி வழக்குரைஞர் வாதி

//உண்மை நகல்//

//உத்தரவிற்காக //

Sd/-xxx
சிரஸ்ததார்
சார்பு நீதிமன்றம், கொடுமுடி.

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி,**
**ஈரோடு மாவட்டம்.**

**முன்னிலை :–திருமதி. பி. ஸ்ரீதேவி.எல்.எல்.எம்.,**
**சார்பு நீதிபதி, கொடுமுடி**

**2025ம் வருடம் ஜூலை மாதம் 28ம் நாள் திங்கள்கிழமை**
**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் ஆடி மாதம் 12ம் நாள்**

**அசல் வழக்கு எண்.338/2024**
**TNED220009762024**

பழனியம்மாள், வயது சுமார் 62 , க/பெ. பி.சுப்பிரமணி, கதவு எண்.5, பூலாங்காட்டு காளியப்ப கவுண்டர் வீதி, தளுவம்பாளையம், கொடுமுடி வட்டம், ஈரோடு மாவட்டம்.

... வாதி

/எதிர்/

எஸ். தங்கராஜ், வயது சுமார் 48, த/பெ. பி.சண்முகம், கதவு எண் 39/55, மெயின் ரோடு வெள்ளியணைகாட்டுர், கொடுமுடி, கொடுமுடி வட்டம், ஈரோடு மாவட்டம்.

... பிரதிவாதி

தாவா சொத்தினை நலந்திகடு கண்டு 3 சரிசமபாகங்களாக பிரிவினை செய்து அதில் 1 பங்கை வாதிக்கு தனியே ஒதுக்கி தனிச்சுவாதீனம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியும், மேற்படி வீதம் பிரிவினை செய்ய ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தக்க உத்தரவிட்டும், பிரதிவாதிக்கு செந்தில் (எ) செந்தில்குமார் 10.02.2010ம் தேதியில் எழுதிக்கொடுத்து ஆவண எண்.271/2010 ஆக கொடுமுடி சார் பதிவு அலுவலகத்தில் பதிவான கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அது வாதியையோ, வாதிக்கு தாவா சொத்தில் உள்ள பங்கு பாத்தியத்தினையோ எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்தும், பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ தாவா சொத்தில் நிரந்தர பாகப்பிரிவினை ஏற்படும்வகையில் எந்தவிதமான மாறுதலோ, வில்லங்க விவகாரமோ செய்யக்கூடாது என்று ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், தாவாவின் செலவு தொகையை வாதிக்கு பிரதிவாதி வழங்க தக்க உத்திரவிட்டும், மேலும் இன்னபிற பரிகாரங்கள் வாதிக்கு வழங்கி தக்க உத்திரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது:–

| | | |
|---|---|---|
| தாவா பரிகாரம் | : | பாகப்பிரிவினை, விளம்புகை, தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை |
| வழக்கு தாக்கல் நாள் | : | 19.11.2024 |

வழக்கு மூலம் : 25.08.2024ம் தேதியில், அதற்குப் பின்னிட்ட தேதிகளிலும் ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், கொடுமுடி கிராமத்தில் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பு : வழக்கு மதிப்பு ரூ.4,33,000/- என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.5,330/-ஐ நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவுகள் 37(2), 25(டி) மற்றும் 27(சி) தமிழ்நாடு நீதிமன்றகட்டணச் சட்டப்படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் திரு.எம்.சதீஷ்குமார் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி, பிரதிவாதி தரப்பில் பி.மாணிக்கம், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி, தாவா தள்ளுபடி ஆகிவிட்ட நிலையில் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

## DECREE

(1) இந்த தாவா தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது

(2) செலவுத்தொகை இல்லை.

## சொத்து விவரம்

**அயிட்டம்:1**

ஈரோடு பதிவு மாவட்டம், கொடுமுடி சார் பதிவு மாவட்டம், தற்போது கொடுமுடி வட்டம், கொடுமுடி கிராமம் ரீ.ச.765/3 நெ.பு.ஹெக். 1.02.0க்கு த.ரூ.1.41

இதன் பழைய க.ச.9,10ஏ இதில்

வடக்கில் கிழமேல் இட்டேரி

கிழக்கில்: கருப்பண கவுண்டர் வகையரா வடிவேல் பூமி

தெற்கில்: கருப்பண கவுண்டர் வகையரா பூமி

மேற்கில்: தாவா 2வது அயிட்ட சொத்து பு.ஏ.1.41 செண்ட் பூமி

இதன்மத்தியில் பு.ஹெக். 0.44.95(பு.ஏ.1.11) விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமியும், மேற்படி பூமிக்குச் சேர்ந்த எல்.பீ.பி. பாசன பாத்தியங்கள் யாவும் சேரவும். பின்னும் மேற்படி பூமியின் வடபுறத்தில் உள்ள கிழமேல் இட்டேரியின் வழியாக இந்த பூமிக்கு வண்டி

வாகனங்கள் ஒட்டிக்கொண்டு போக வரவும் கால்நடைகள், ஆட்கள் சகிதம், நடந்து போகவரவுள்ள நடதட மற்றும் வண்டித்தட பாத்தியங்கள் யாவும் பாகப்படி சேரவும்.

பின்னும் மேற்படி பூமிக்கு ரீ.ச.763 நெம்பரில் உள்ள சிறிய பாசனக்கிணர் ஒன்றில் பொதுவில் பாகமும் மேற்படி கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 8 எச்.பி.ஆயில் இன்ஜின் பம்பு செட் ஒன்றில் பொதுவில் பாகமும், மேற்படி பாகவிகிதாச்சாரப்படி மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து மாமூல்படி கொண்டுவந்து இந்த பூமிக்கு பாசனம் செய்து கொள்ளும் பாசன பாத்தியம். பின்னும் மேற்படி கிணற்றுக்கு போகவரவுள்ள தட பாத்தியம் சேரவும்.

மதிப்பு ரூ.5,58,000/–

<u>அயிட்டம்–2</u>

ஈரோடு பதிவு மாவட்டம், கொடுமுடி சார் பதிவு மாவட்டம், தற்போது கொடுமுடி வட்டம், கொடுமுடி கிராமம் ரீ.ச.765/3 நெ.பு.ஹெக்.1.06.0க்கு த.ரூ.1.40

இதன் பழைய க.ச.9,10ஏ இதில்

1வது அயிட்ட தாவா பூமிக்கும் மேற்கு,

பொங்கியண்ண கவுண்டர் வகையராவிடம் கருப்பண்ண கவுண்டர் கிரயம் வாங்கியுள்ள பூமிக்கும் கிழக்கு

கருப்பண கவுண்டர் வகையரா பூமிக்கும் வடக்கு

கிழமேல் இட்டேரிக்கும் தெற்கு

இதன்மத்தியில் பு.ஹெக்.0.57.09 (பு.ஏ.1.41) விஸ்தீரணமுள்ள புஞ்சை பூமியும்,

மேற்படி பூமிக்குச் சேர்ந்த எல்.பீ.பி. பாசன பாத்தியங்கள் யாவும் சேரவும். பின்னும் மேற்படி பூமியில் வடபுறத்தில் உள்ள கிழமேல் இட்டேரியின் வழியாக இந்த பூமிக்கு வண்டி வாகனங்கள் ஓட்டிக்கொண்டு போகவரவும் காலைநடைகள் ஆட்கள் சகிதம் நடந்து போகவரவுள்ள நடதட மற்றும் வண்டித்தட பாத்தியங்கள் யாவும் பாகப்படி சேரவும். பின்னும் மேற்படி பூமிக்கு ரீ.ச.763 நெம்பரில் உள்ள சிறிய பாசனக்கிணர் ஒன்றில் பொதுவில் பாகமும், அதில் உள்ள 8 எச்.பி. ஆயில் இன்ஜின் பம்பு செட் ஒன்றில் பொதுவில் பாகமும், மேற்படி பாக விகிதாச்சாரப்படி மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து மாமூல்படி கொண்டு வந்து இந்த பூமிக்கு பாசனம் செய்து கொள்ளும் பாசன பாத்தியமும்.

பின்னும் மேற்படி கிணற்றுக்கு போகவரவுள்ள தட பாத்தியமும் யாவும் சேரவும்

மதிப்பு ரூ.7,08,000/—

மொத்த சொத்து மதிப்பு ரூ.12,66,000/—

வாதியின் 1/3 பங்கு மதிப்பு ரூ.4,22,000/—

இன்று 2025—ம் வருடம் ஜூலை மாதம் 28ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.07.28 16:10:20 +0200

சார்பு நீதிபதி,
கொடுமுடி